அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

மலர் 1 } விரோதி௵ மார்கழிமீ 1949 டிசம்பர்—ஜனவரி 1950 { இதழ் 9

தாழ்மை

(ஸ்ரீ திருப்புகழ் மணி)

" தாழ்வைத்து வாழவைப்போன் தணிகைமலை நாதன் " என்பது ஸ்ரீ மத்தாவின் அருள்வாக்கு. இதன் உண்மையை எங்கே காணலாம்? ஏன், தொண்டர் குழாத்தில் கண்டுவிடலாம். எல்லா பாவங்களிலும் குணங்களிலும் உணர்ச்சியிலும் நம்மை மேன்மைப் படுத்துவது என்னவென்றால், நம்மிலும் தாழ்மையுடையோர் இல்லை என்னும் இயல்பு. இந்தத்தகைமை, தத்துவ ஆராய்ச்சியாலும் அநுபூதியாலும் மாத்திரந்தான் ஏற்படும். எவ்வுயிரும் சிவனும் சக்தியும் கலந்து விளையாடும் கோயிலெனவும், உயிருக்கு உயிராய் நிற்கும் ஓர் பொருள்தான் முருகன் எனவும் ப்ரம்மம் எனவும் அநுபவ பூர்வமாக நிலைத்து விட்டால் இன்பநிலை வெகு சீக்கிரம் எட்டிவிடும். " மனமே பெருமையும் மனமே சிறுமையும் மனமே இருமையும் ஒருமையுமே " என்று பெரியார்கள் பாடியுள்ளா. பெருமை என்

கமல பத வாழ்வு தர மயிலின் மீது
கருணையுடனே முன் வரவேணும்

பது பெருமிதம் இன்மையென்றும், சிறுமை என்பது பெருமிதம் ஊர்ந்துவிடல் என்றும் போதித்தார் வள்ளுவர். பெருமையும் சிறுமையும் இருமையில் உண்டாவதால், உலகின் கண் தோன்றும் இருமையை ஒருமைப்படுத்தி விட்டால், பெருமை சிறுமை இரண்டும் அழிந்து விடும். போதித்து நின்ற மனத்தின் பெருமையைத் தாழவைத் தால், தன் பெருமைதான் அழியும். தன் பெருமை அழிந்த இடத்தில் ஆண்டவன் உலகம் கடந்த பெருமையின் பேருணர்ச்சி தோன்றிவிடும். அந்தப்பெருமை யாது? "தன பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ" என்பது திருவாசகம். தொண்டர் குழாத்தில் ஒவ்வொரு தொண்டரும ஒரு முருகனாகவும் வள்ளியா கவும் காணப்படும் நிலையில்தானே ஸ்வரூபானுபூதி ஏற் படும். ஆகவே எங்கும் முருகனைக் கண்ட மனம் தாழ் வடையும். இந்தத் தாழ்மையில் அல்லவோ பேரின்ப உணர்ச்சியும் பெருவாழ்வும் ஏற்படுகின்றது? அபேத அன்பால் சற்றும பேதமின்றி எல்லாவுயிர்களையும் சமமா கக் கருதி வெறுப்பின்றி அணைக்கும் அன்பர்கள் உள்ளத் தில்தான் ஸ்ரீ நடராஜர் நிலைக்கின்றார் என்று வள்ளலார் உணர்ந்தாராம். அப்படி உணர்ந்தவருக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற அவாக்கொண்டு அப்பெரியார் களைத் தேடியே நிற்கின்றாராம். அன்னார் அற்புதமான வாக்கை கவனிக்க வேண்டுமே:

" எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந் தம்முயிர் போல்எண்ணி
யுள்ளே ஒத்து உரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர் அவர்
உளந்தான் சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இட
மென நாம் தேர்ந்தேன் அந்த வித்தர்கள்தம் அடிக்கேவல் புரிந்
திட என் சிந்தைமிக விழைந்த தாலோ "

அடியனை நினைத்து நாளும் உடல் உயிர் விடுத்தபோது
அணுகி முனளித்த பாதம் அருள்வாயே

பண்ட மாற்று

(அ. மு. பரமசிவானந்தம்)

தெருவில் 'தயிரோ தயிர்' என்ற ஒலி இரண்டு மூன்று முறை எழுந்து அடங்கிற்று. எங்கள் வீட்டிற்குத் தயிர் தேவைதான். எனவே எனது செல்வி மங்கையர்க்கரசி உடனே ஓடிச் சென்று தயிர் விற்பவளை அழைத்து வந்தாள். தயிர் விலை என்ன என்று கேட்டேன். விலைக்குக் கொடுப்பதில்லை என்று கூறினாள். நான் உண்மையிலேயே திகைத்துப் போனேன். விலைக்குக் கொடுக்காத ஒருத்தி—விற்கும் மங்கை—இப்படித் தெரு வெல்லாம் கூவித் திரிவானேன் என்றுகூடத் தயங்கினேன். எதற்கும் கேட்டுவிடுவது என்று கருதி, ஏனம்மா விலைக்குத் தரமாட்டேன் என்கிறாய்? பின் ஏன் இப்படி வயிறு வீங்கக் கூவிக்கொண்டு செல்கிறாய்? என்றேன். அவள் ஒரு சிரிப்பினால் எனக்குப் பதில் அளித்து விட்டதாக நினைத்தாள். எங்கள் ஊரில்—சொந்தக் கிராமத்தில்—எங்கள் வீடு எப்போதும் அடைபட்டுத் தான் கிடக்கும். எப்போதோ ஆண்டுக்கு ஒருமுறை விடுமுறையில் செல்லுவோம். செல்லும்போதெல்லாம் எங்கள் உறவினர் ஒருவர் வேண்டும் பாலும் தயிரும் தந்து உதவுவார். இந்தமுறை அவர்வீட்டில் நல்ல கறவை இல்லாததால் வெளியேவாங்க நேர்ந்தது. பூட்டிய வீடு திறந்து நின்றதாலேயே, தாங்கள் புதியவர் என்று அத்தயிர்க்காரி எண்ணித்தான் சிரித்தாள் போலும். எனினும் நாங்கள் அந்த ஊர்என்பது அவளுக்குத் தெரியும். என்னுங்க! ஊரைவிட்டுப் போய்விட்டதாலேயே ஒன்றும் நினைவில்லையா? இங்கெல்லாம் பட்டணம் போலப் பணத்துக்குக் கிடைக்காது? ஒருபடி தயிருக்கு ஒருபடி நெல். நாங்கள் கொள்வதும் கொடுப்பதும் பண்டமாற்றிலே தான், என்றாள். எனக்கு எல்லாம் நன்கு விளங்கிவிட்டது. காசும்பணமும் கால தேசங்களுக்கு ஏற்ப மாறும். பண்டமாற்றாயின் விலை எப்படியாயினும் வேண்டியவர்களுக்கு வேண்டியது கிடைத்து விடுகிறது. எங்களுக்கு வேண்டியது தயிர். அவளுக்கு வேண்டியது வயிற்றுக் கவலை போக்கச் சோறு—அதற்கு நெல். நல்ல முறை. இந்தமுறை எல்லாப்பொருள் மாற்றிலேயும் அமைந்தால் நலமென எண்ணினேன். பேசாமல் வீட்டில் இருந்த பழைய நெல்லைக் கொடுத்து வேண்டிய தயிரை வாங்கிக் கொண்டோம்.

தயிர்க்காரி சென்று விட்டாள். சிறிதுநேரம் 'தயிரோ தயிர்' என்ற ஒலி என் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அத்துடன்

என் உள்ளத்திலும் ஏதோ ஒரு எதிரொலி கிளம்பிற்று. நாற்காலியில் சாய்ந்தேன். உள்ள எதிரொலி அதிகமாயிற்று; வெளியே தயிர்க் காரியின் ஒலி அடங்கியபின்னும். ஆம்! இவ்வுலகத்தில் மக்கள் .தங்களிடதது மிகுதியாக உள்ள பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து, தமக்குத் தேவையைப பதிலுக்குப் பெற்றுப பயன் பெறுவர் என்பது அறிந்தேன். இது வெளி ஒலி—உலகநிகழ்ச்சி. இது போன்று உள் ஒலி—உள்ள நிகழ்ச்சியும் ஒன்று உண்டே என்று எண்ணும் போதே என்னை மறந்தேன்.

உலகம், உயிர், இவற்றை உண்டாக்கிய ஒருவன், ஆகிய மூன்றும்—மூவரும் அழியாப பொருள்கள் என்பது சைவ சித்தாந்தம் கண்ட உண்மை. உயிர், உலகை உண்டு என்று எண்ணி அதில் ஆழ்ந்து தன் அவாநீங்க அன்பில்—இன்பில் திளைக்கின்றது. அந்த நிலையில் சில உயிர்கள் மூன்றில் ஒன்றை—முதற்பொருளை மறக்கின்றன. அனுபவிக்கின்ற தாமும், அனுபவத்திற்கு உரிய உலகும் மட்டும் அவ்வுயிர்களுக்குத் தெரிகின்றன. இறை உணர்ச்சி தோன்றுவதில்லை. ஆனால துன்பத்தில் வழுக்கி விழும் காலத்தோ அந்த இறை உணர்ச்சி எப்படியோ உண்டாகிறது. துன்பத்தில் துணைதேடும் அவ்வுள்ளம் இன்பத்தில் பிறரை எண்ணிபபார்ப்பதில்லை. எனவேதான் ஆணவத்தோடு அத்துவிதமாகி நிற்கின்றன. ஆனால் சில உயிர்கள் தமமைமட்டும் காணவில்லை தனித்த உலகை மட்டும் காணவில்லை. அதற்கும்மேலாக அவ்வுயிர்களின் காட்சி ஓடுகின்றது. உலகில் தன்னைபபோல் வாழ்கின்ற—மகிழ்ச்சி அல்லது துக்கம் என்ற இரண்டிலே ஒன்றில் பட்டுழல்கின்ற பிற உயிர்களைக் காண்கின்றன. கண்ட உடனே எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது. இந்த எண்ணத்தில் இறை உணர்வு மேலோங்குகின்றது. மற்றவர் வாழ வழிவகுக்கும் மாசற்ற உள்ளமும் இறையுணர்வும ஒருங்கு தோன்றிய உயிரிடம் 'தான்' என்ற தன்மை கெடுகின்றது. தனது என்ற முனைப்பு நீங்குகின்றது. உலகம் வாழ தான் அவ்வுலகோடு, அவ்வுலகுக்கு முதலான ஒருவனோடு ஒன்றிவாழ வேண்டும் என உணர்கின்றது. அந்த உணர்ச்சி வெள்ளத்திலே தன்னைப் பறிகொடுக்கிறது. அந்தத் தன்னைமறந்த நிலையே—தனக் கெனவாழாப பிறர்க்குரியாளனாகும் நிலையே—தனக்கு வரும்துன்பத்தையேற்று, அதற்காக வருந்தி

செங்கோடமர்ந்த பெருமானே

குன்று மலைந்து அலைவேனோ.

சூரியானனுகும் மற்றவர்க்கு மாறுபட்டுத் தீங்கிழைக்கா வகையே தவமாகப் பேசப்படுகின்றது.

'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

என்றார் அறம் வகுத்த அண்ணலார்.

இவ்வாறு தன்னையே கொடுக்கும் செயல் மிகச்சிலரிடம் தான் காணப் படுவது. அவர்தாம் ஞானியர் முனிவர்—அடியவர் என்று அழைக்கப்படுவர். இப்படித்தன்னைக் கொடுப்பதால் பயன் உண்டா என்று கேட்கலாம். தன்பானையில் இருந்த தயிரை கொடுப்பதற்கே பதிலுக்குப் பண்டமாற்றாக நெல்முதலிய தானியங் களைப் பெறவிரும்பும் நிலையில், தன்னையே கொடுத்ததற்குப் பயன் வேண்டாமா! வேண்டாம் என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். அதற்குப்பயன் இறைவனோடு இரண்டறக்கலத்தல். எங்கும் நிறைந்த இறைவனை அவனது தோற்றங்களாக உலவும் உயிர் களை—உலகமக்களை ஒத்துநோக்கும் நெறியில் தன்னைக் கொடுத் தால் அதற்குப் பதிலாக அந்த உலகையே—அவ்வுயிர்களின் அன்பையே, அவற்றிற்கு மேலான அறிவொளிப்பிழம்பாம்ஆண்ட வனையே பெறலாம். இது ஒருபண்டமாற்று எனக்கேட்கத் தோன் றும்.ஆம்! நம் நம்மைக்கொடுத்தால்--அவன் தன்னைக் கொடுப்பான். அதனால் பயன் என்ன? எல்லை அற்ற இன்பம்! அளவற்ற ஆனந்தம்! மட்டற்ற மகிழ்ச்சி! எல்லாம். இந்த இன்பம் எல்லாராலும் பெறக்கூடிய மகிழ்ச்சியன்று. பெற்றவர் உண்டா! உண்டு. சான்று காட்டுவீரா! அவர் வாய்ச்சொல்லே சான்றாகக் காட்டலாம். அழுது அவனை அடைந்த அன்பர் மாணிக்கவாசகர் அத்துறையில் தலை நின்றவர். தன்னைக் கொடுத்து, தலைவனை அடைந்தார். அவர்பெற்றது அளவிலா ஆனந்தம். ஆனால் இறைக்கோ! ஒன்றுமில்லை. எனவே இப்பண்ட மாற்றில்வெற்றி கண்டவர்—பயன் பெற்றவர் மாணிக்கவாசகர். இதை அவர்தம் திருப்பாட்டிலேயே—பாநலத்திலேயே காணலாம்.

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்,
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்;

நான்போய் விடாமல் ஆறுறு மீதில்
ஞானோபதேசம் அருள்வாயே.

சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே !
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற் கிலன் ஓர் கைம்மாறே

இப்பாட்டில் இறைவனோடு நேரில் பேசும்முகத்தான் தான்பெற்ற இன்பத்தைக் காட்டுகிறார். அதுமட்டு மன்று' உண்மைச் சைவர்கள் உண்மைச் சமயிகள் உணரவேண்டிய வழியையும் காட்டுகிறார் அவர். வெறும் வேடங்களும். ஆரவாரங்களும் ஆண்டவனை நம் அருகில் அழைக்க உதவா! உண்மையில் நாம் ஆண்டவனை அடைய வேண்டுமாயின் முதலில் நம்மை நாம் மற்றவர்களுக்கு—உலகுக்கு—ஒருவனுக்கு உரிமையாக்க வேண்டும். அவ்வாறல்லாது வெறும் வெளிப்பகட்டால் ஒன்றும் நடவாது. எங்கே உளத்தூய்மை உண்டோ—செயற் செம்மை உண்டோ—சொல்நலம் உண்டோ, அங்கு உண்மை அன்பு முகிழ்க்கும். அந்த அன்பு தன்னினும் பிறிதாகிய உயிர்களிடைச் சென்றுபாவி பின் இறுதியில் பரமன்பால் பற்றும். அந்த நிலையில் அவன் தோன்றுவான். அவனோடு ஒன்றாகும் உயிர் 'நீயும் நானுமாய் ஏகபோகமாய்' நிற்கும் நிலைவரும். அந்த நிலை யார்க்கும் எளிதன்றே! எங்கோ ஒரு மாணிக்கவாசகர் பெற்றார்! மற்றவர்பெற விழைந்தார்—முயன்றார். ஆனால் இவரைப் போல் பெற்றவராகக் காணவில்லை. பெற்ற இன்பத்தை உலகுக்குக் காட்டி மணிமொழி அருளிய அவர் புகழ் வாழ்வதாக என்று வாழ்த்தினேன். அவர் வாழ்கின்றார்! மணிமொழி வாழ்கின்றது; மாநிலம் அவர்வழி உலகுக்கும் உயிருக்கும் உற்றபெருந்தலைவனும் தன்னை ஒறுத்துப் பணியாற்றின், அதுவும் வாழும்! நாம் வாழ்வோம்; அந்நாளே நன்னாள். இன்ப அன்பால் நிறைந்த இரண்டறக்கலந்த வேறுபாடற்ற அந்நாள் வருவதாக!

சராசர வியாபக பராபர மனோலய
சமாதி அநுபூதி பெற அருள்வாயே.

ஸ்ரீ குமர குருபரர்

(அருளிய)

கந்தர்கலிவெண்பா

(ரசபதி)

மனித ஆத்ம உணர்வு சிறிது மேனேக்கி நின்ருல் மகாத்மா எனும் பெயர் பெறும். இன்னும் சிறிது முன்னேறிஞல் பரமாத்மா. ஒருசிறிது கீழ்நோக்கினல் துராத்மா. அதன்மேலும் கீழ் சென்ருல் அதமாத்மா. இந்த உயர்வும் தாழ்வும் உணர்வைப் பொறுத்த செய்தி. பயிரைக் கெடுக்கும் களைகள் போல தூய உணர்வைக் கெடுக்கும்பிழைகள். கண் கெட்டாலும் கதிபெறலாம். உள்ளங் கெட்டால் என்றும் உய்தியில்லை. கடலை நீந்திக் கரையடைந்தது போல் அரிதுகிடைத்த மனித உடல் நெடிது நில்லாது கடிது அழியும். கழியுமுன் மதிமாண்பு மிகுந்து கதிகாண்டல் நலம். பூர்வ வாசனை போய்த்தொலைய, கருப்பவாசனை கழிய, பழக்கவாசனை பாழாக, ஊனை உருக்கி உள்ளொளி பெருக்குவர் ஞான நலத்தவர். இதனல் நேரும் சித்த சுத்தி சிவத்தைக் காட்டும். அம் மாசறு காட்சியால் தேசுமிகுந்து ஜீவன் திகழும். இந்நிலை பெற உலகம் என்றும் முயன்று வருகிறது.

இலக்கணம் உடல். இலக்கியம் உயிர். கனிந்த உயிரின் உணர்வு கலை. பதப் பொருள் அறிதலும் பகுதிப்பொருள் தெரிதலும் கலையின் பாலபாடச் செய்தி. இவ்வளவில் நிற்கின்ற புலமை, மொழிவளர்ச்சிக் குரலெழுப்பி முடங்கும். சமயவளர்சிக் குரலெழுப்பி சரியும்.

கலை விளங்கினற்ருன் கடவுள் நிலை விளங்கும். ஒருமை உணர்வு ஒன்றுதான் கலைவிளங்கக் கை கொடுக்கும். முகிழ்கும் அந்த உணர்வு பெற என்றும் முயல்கின்ருர் சிருஷ்டி கர்த்தா. இதனை முதலில் குறிப்பிடுகின்ருர் குமர குருபரர். இப்போது மேல் நாட்டவர் அந்த பிரம்மதேவர். கீழ்

வ்யாபார மூடன் யானும் உனதிரு சீர்பாத தூளியாகி
காஇடை வீழாமலே சுவாமி திருவருள் - புரிவாயே.

களுக்கே உரியகீழ்நாட்டம் இல்லாத அவர்தம் கோதிலாத நான்கு நாவும் பண்சுமந்த வேதம் பாடுமாம். மளமள என்று உருளும்அவர்கை ஜபமணி. தெய்வமணம் கமழும் கமண்டலம். மற்றொரு திருக்கரத்தி லிருக்குமாம்காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதியென்னும் தேவியர் மூவரும், அவருடைய முதிர்தரு தவத்திற்கு உதவ முந்துவார்களாம்.

தனிச்சிறப்புடைய அவரைத் தாங்குகிறது ஒருதாமரை. அது ஒரு ஆதாரகமலம். 'பூமேவு செங்கமலப் புத்தேளின் முயற்சியில், யோகநிலை கைவந்ததும் அறியாமை விரித்த திரை யகல்கிறது. இந்நிலையில், இருள்மயமான காட்சிப் பொருளாயிருந்த கலை விளங்கி நல் வழிகாட்டும் அளவில் மேலேற்றுகிறது. அதன் வழி வீறுகொண்டு மேலேறும் ஆன்ம உணர்வு, செல்லும் நெறியில் நேரும் வண்டி ஞொலி, குழலொலி முதலிய நாத நயத்தில் வயிக்கும் அகத்தை அள்ளும் அந்த நயப்பிலும் அருளொளி தரிசனம் ஆகவில்லை, நாதங் கடந்து போதம் பெற இன்னும் மேலேறுகிறது, நலஞ்சான்றஜீவ உணர்வு, என்ன வியப்பு!

நாதம் போதம் இரண்டன் நடுவில் மாயா ஜால வித்தைகள் பல நடமிடுகின்றன. அதிசய அவ்வித்தையில் சிறிது அயர்ந்து நின்றால், கீழிறங்கி சித்து விளையாடும் உலகாகாரமாகிவிட நேரும். பலகாலமாக முயன்று பன்மையிலிருந்து ஒருமைக்கு வந்து வாழும் உணர்வு, பாழ் நிலத்தில் வீழ்வதுவோ என்று பதைப்பு மிகுந்துஅருள்வேட்கை அதிகரித்து, 'அளியே நிறைந்த போரூரா! அடியேன் உன்றன் அடைக்கலமே' என்று அலறும் ஆன்ம உணர்வு. இந்த வேட்கையின் வேகம், நாத நிலையினிருந்து போத நிலைக்குத் தூக்கும். அந்நிலையில் தீப ஒளி நேரும். அதைப் புருவ நடுவில்காண்பர் சாதகர். சந்தன குங்குமப்பொட்டால் அதை நினைவுறுத்திக் கோடலும் ஒருநிலை. 'தீபவிளக்கங்காண எனக்குன் சீதள பத்மம் தருவாயே' என்பது, இதுகருதிய பிரார்த்தனைப் பாடல்.

ஆராயு நீதி வேலு மயிலும் மெய்ஞ்ஞானபிராமதாபவடிவமும்
ஆபாதனேனு நாளு நினைவது பெறவேணும்.

தீப விளக்கும் வரவர மின்னல் ஒளியாய், தீவட்டி ஒளியாய், விரிசுடர் உருசு எனும் பாண ஒளியாய், சந்திர ஒளியாய், சூரிய ஒளியாய் விரிதலுறும். அவ்வொளி வெள்ளத்தால், மறையாயிருந்த வேத ரகசியங்கள் எல்லாம் வெளியாகும். ஆகா! எல்லாம் விளங்கி விட்டது என்று அங்கேயும் அகந்தை வரும். தவிர்க்க முடியாதது அத்தடிப்பு. அதைத் தடிந்து அருள் ஒளி. என்னை ஏற்கும் நாள் எந்த நாள்! சுதந்தர மில்லா என்னைச் சுக சொரூபத்தில் சேர்க்கும் நாள் எந்த நாள் என்று ஏக்கம் கொண்டு ஏத்தும் ஜீவனை, வளர்ந்து எழுந்த அந்த ஒளி, அகண்டாகாரப் பெருவெளியில் சேர்க்கும். இதுதானோ சித்தாந்தம் என்ற சிந்தனையுடன் அங்கும் பாதத்தைக் காண இயலாமல் ஓய்வு கொள்ளும் உயிர். சும்மா இருக்கும் அந்நிலையில், முதலும் இடையும் முடிவும் காண முடியாத பேரின்பத் தெளிவு பிறக்கும். அத் தெளியொளி யின்பந்தான் எவ்வகைப் பற்றையும் காணாத பரஞ் சுடரின் முழுமை என்று அதனில் கலந்து மெய்மறக்கும் நிலைபிறக்கும்.

என்ன அற்புதம்! யோகபிரமனும், கனிதரு கலையும், நாத நிலையும், போதப் பொலிவும், வேத வியனும், சித்தாந்தச் செய்தியும் காண இயலாத பேரொளி நிலையது அந்த பெரிய மெய்ப் பொருள் என்று, நாநயம் பாநயம் விநயம் விளங்க, எவ்வளவு அருமை யாகக் கூறுகிறார் பாருங்கள் நம் குமரகுருபரர்.

'பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு நாதமும், நாதாந்த முடிவும், நவைதீர்ந்த போதமும் காணாத போதமாய்,—ஆதி நடு அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப், பந்தம் தணந்த பரஞ்சுடராய்'

பல மலர் மணத்த வார்க்கழல்
கனவிலும் நனவிலும் மறவேனே.

[செங்கமலப் பூமேவு புத்தேள்—பிரமதேவர். தேறரிய—தெளியக் காண்டல் இயலாத. பா—கலாரூபமான பாக்கள். பழமறை—அநாதி நித்தியமான வேதம். ஐயம் திரிபு அறியாமையெனும் குற்றம். போதமாய்—தேர்ந்த தெளிவாய். பரஞ்சுடர்—மேலான தெய்வ ஒளி]

சுருங்கலாற்றுச் சொற்களின்மூலம் இறைவன்சொரூபச் செய்தியை, யிங்ஙனம், மன நெகிழ்ந்து வாய்மலரும் முனிவர் குறிப்பை யின்னுங் காண்பம். (தொடரும்

பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்.

(க. சோமசுந்தர செட்டியார்.)

[திருஞானசம்பந்தர்—திருவையாறு. பண்—மேகராக குறிஞ்சி]

சோழ நாட்டிலுள்ள திருவையாறு என்னும் திவ்ய தலத்துக்குத் திருஞானசம்பந்தர் சென்றார். அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பஞ்சநதப் பெருமானை வணங்கினார். வழிபட்டார். வாயாரத் தேவாரத் திருப்பதிகத்தால் வாழ்த்தினர். இப்பதிகத்துள் முதல் பாட்டின் இறுதியிலுள்ள இரண்டடிகளைக் கவனித்துப் பொருளுணர்ந்தால் நல்ல குழந்தையாகிய ஞானசம்பந்தர் இயற்கை யழகை யெங்ஙனம் அநுபவித்துள்ளார் என்பது விளங்கும். தான் அநுபவித்த அந்த இயற்கைக் காட்சியை நமக்குக் காட்டி நம்மையும் மகிழ்விக்கிறார்! இதுவே பெரியோர்கள் இலக்கணமாகும். தாங்கள் கண்டின்புற்றதை யுலகிற்குக் காட்டிய உலகத்தையும் இன்புறச் செய்வர்.

இனிப்பாட்டு வருமாறு:—திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறி கலங்கி
நெறிமயங்கியறி வழிந்திட்டைம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்றருள் செய்வான்
அமருங் கோயில்.

யோகத்தைச்சேரு மாறு, மெய்ஞ்ஞானத்தைப் போதியாய்
இனி யூனத்தைப் போடிடாது மயக்கவாமோ.

வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழை யென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்குந்
திருவையாறே.
திருச்சிற்றம்பலம்.

கடவுள் ஒரு வனுண்டு. அவனால் படைக்கப் பட்ட உயிர்களும் உலகமும் உண்டு என்னும் வேதம்,
"அம்பிகாபதயே" உமாபதயே,
பசுபதயே நமோநம :—

பசுபதிக்கு வணக்கம் என்கிறது வேதம். பசுபதி என்றதனால் பசு என்னும் ஒருபொருள், பதி என்னும் ஒரு பொருள், (பசு என்றதனால் பாசத்தினால் கட்டப்பட்ட உயிர்களுக்குப் பசு என்று பெயரானதால்) பாசம் என்னும் ஒரு பொருள், ஆக மூன்று பொருள்கள் உண்டு என்று நிச்சயிக்கும். உயிர்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்பச் சரீரங்களை எடுத்துக் கொள்ளுகின்றன. இச்சரீரங்கள் பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் ஆக்கப் பெற்றவை.

நம் உடம்பில் கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் உண்டு. வாதம், பித்தம், சிலேத்துமம் சமமாக நடந்து கொண்டிருந்தால் சரீரத்தில் நோயில்லாமல் இருக்கலாம். கடைசிகாலத்தில் உயிர் உடம்பை விட்டுப் பிரிகின்ற நேரத்தில் சரீரத்தில் ஏற்படும் நிலையை விவகரிக்கின்றது இப்பாட்டின் முற்பகுதி.

மெய், வாய், கண், மூக்குச் செவியென்னும் ஐந்து கர்மேந்திரியங்களும் தங்கள் தங்கள் நிலைகளினின்றும்மயங்கி தொழில் செய்யாமல் நிற்கும் நேரத்தில், அறிவுகெட்டு, வாய்பேச ஒட்டாமல் நெஞ்சில் கபம் அதிகரித்து உயிர் ஏக்கமுற்று நிற்கும் கடைசிநேரத்தில் "அஞ்சேல்" என்று அருள் செய்யும் பஞ்சநதப் பெருமான் எழுந்தருளியுள்ள திருவையாறு என்றார்.

திரிதல் ஒழிந்து மனது கசிந்தன்
இணையடி யென்று புகழ்வேனே.

உயிர்களிடத்தில் கருணையுள்ள சிவபெருமான் ஆன்மாக்களுக்கு இன்ப துன்பங்களையனுபவிக்கக் கூடிய சரீரத்தையும் அந்தக் கரணங்களையும் உலகத்தையும் அதிலுள்ள போகத்தையு மருளியுள்ளான். உயிர்கள் உலகில் தாம் செய்த நல்வினைக்கேற்ப இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக் கின்றன.

திருவையாறு புண்யதலம். அதில் எழுந்தருளியுள்ள பெருமானோகருணைவடிவினன். அவ்வூரிலுள்ள உயிர்களோ மிக்க புண்ணியத்தைச் செய்துள்ளன! எனவே எப்போதும் இன்பத்தையே யனுபவித்துக் கொண்டிருந்தன. இதனால் அவ்வூரிலுள்ளார் அனைவரும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். இதன் விளைவு ஆடலும் பாடலுமாகும். பழங் காலத்தில் ஊரமைத்த பெரியார்களும் நகரத்தின் பலபாகங் களில் அரங்குகளைக் (மக்கள் திரண்டு கூடும் இடம்) கட்டிவைத்தனர். இன்பமேலீட்டால் அங்கும் ஆடல் பாடல் நடந்தன.

அவ்வரங்குகளிலே பெண்கள் நடனமாடினார்கள்.

அதற்குப் பக்கவாத்தியமாகிய மத்தளம் (முழவு) ஒலித்தது. அது இடியோசையை ஒத்திருந்தது. அதனைக் கேட்டன சில குரங்குகள். தெருவில் நடமாடிக் கொண்டிருந்த அவைகள் இம்மத்தள ஓசையை இடியோசை என்று நினைத்து மழைவருமோ என்று பயந்து பக்கத்திலுள்ள மரங்களின் மேல்கிளைகளில் ஏறியண்ணாந்து ஆகாயத்தில்மேகமிருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருந்தன. இப்படிப்பட்ட வளமுள்ள திருவையாறு என்றூர் ஞானசம்பந்தர். இது மேற்படி பாட்டின் பிற்பகுதியின் கருத்து

திரிசிராப்பளி வாழ்வே தேவர்கள் தம்பிரானே
கருணை நோக்கமிலா மாபாவிகள் இன்பமாமோ.

திருப்புகழும் கருப்புகழும்

(திருப்புகழ் சதுரர் சே.த. இராமலிங்கம் பிள்ளை, B. A, B. T.)

உலகத்தில் மக்களில் பலரும் விரும்புவது எது? புகழே. பிறர் தன்னை மதிக்க வாழ்வதும், அதற்கு ஆவன வற்றைச் செய்வதுமே மனிதன் முயற்சியாக இருக்கிறது. இல்லாத பெருமையையும் தன்னிடம் இருப்பதாக ஏற்றிக் கூறி ஏமாற்றுபவரையே சிறந்தவரெனக்கொண்டு அவரி டம் மிக்க அன்போடு மனிதன் பேசி உறவாடுவதைக் காணலாம். இதன் அடிப்படையான கருத்துதான் என்ன? தன்னைப் பலரும் புகழ வேண்டும் என்பதே யன்றோ!

வறட்டுப் புகழைப் பெறவேண்டிப் பணத்தைச் செல விடும் பாக்கியவான்களும் உளர். இரவல் நகையும், பகட்டு உடையும் வாங்கி அணிந்து தம்மைப் பல்லோரும் அள கேசன் என்று அழைக்க வேண்டுமென்னும் ஆசையுடைய வரும் இல்லாமலில்லை.

இத்தகைய புகழ் தக்கார்க்கொன் றீவதால் நேரும்; ஆதலின், ஈதல், இசைபடவாழ்தல் என்பனவே உயிர்க்குச் சிறந்த ஊதியமாகும் என்ற பொதுமறை வாய்மையை உட் கொண்டு நாலுபேருக்குக் கஞ்சி வார்த்துநாநூறுபேருக்கு அன்னதானஞ் செய்ததாக விளம்பரப்படுத்தி அட்டைப் பட சித்திரமாகத் தம் படத்தை வருவித்து அகமகிழ்ச்சி கொள்ளும் அப்பாவிகளும் பலபேர் உண்டு.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற பொய்யில் புலவன் பொருளுரை தேர்ந்து புகழெனின் உயிரும் கொடுக்கும் புண்ணிய சீலர்களையும் காணக்கூடும்.

கருப்புகழ்: அப்படிக்கெல்லாம் நல்ல வழியிலோ அல்லாதவழியிலோ புகழ் படைத்தவர்கள் எங்கே; அவர் கள் அரிதில் தேடிய புகழ் என்னவாயிற்று? 'தம் புகழ் நிறீ இத்தாம் மாய்ந்தனரே, என்று சங்க இலக்கியம் சாற்றுவது கேண்மின்!

பாவப்பழி செய்ப் பதியிற் பரமக் குரு நாதா
தனையிட்டு வருத்தும் யமபாசத் துயர்தீராய்.

மாய்ந்தவர் புகழும் சில காலத்திற்குப் பின் சாய்ந்தது, தேய்ந்தது. இதற்குக் காரணம் என்ன? இப்புகழ் படைத்தோரனைவரும் ஒருகாலத்து அழிந்தொழிய வேண்டியவர்களே. பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் இவ்வுலக இயற்கை. எனவே, இவர்கள் ஈட்டிய செயற்கைப் புகழ் (Artificial) அழியுந் தன்மையதேயாகும். உலகம் அறிவற்றது, அழியத்தக்கது அதனை 'மன்னு உலகம்' என்று புறநானூறு கூறும். அறிவற்றதும் அழியத்தக்கதுமான உலகிற்குப் புகழ். உண்டோ? இல்லை! இல்லை! அறிவுள்ள பொருளையே அனைவரும் புகழ்வர். அறிவற்ற ஒன்றினை யாவரே புகழ்வர்?

சிற்றறிவுடைய உயிர்களுக்கு மாத்திரம் இயற்கைப் புகழ் ஒன்று இருக்கிறது. சிற்றறிவிற்கேற்பச் சிறு தொழிலே செய்யக்கூடும். அதனால் கிடைக்கும் புகழும் சிறியதாகவே இருக்கும். சிற்றுயிர் இவ்வுலகில் சில நாட்களே வாழும். அதன் புகழும் சில நாட்களே நிலைத்து நிற்கும்.

சீவனின் சிறுதொழில் :—

சிற்றறிவுடைய சிற்றுயிர் செய்யும் தொழில்தான் என்ன? பரமாணுவாகப் பஞ்ச பூதங்களிற் கலந்து விண்ணின்று மழையுடன் மண்ணிலிறங்கி உணவு மூலமாய் தந்தை உதரத்தில் இரண்டு மாதமும் தாயின் சேர்க்கையினால் பின் அவள் வயிற்றில் பத்து மாதமும் தங்குகிறது.

தாய் வயிற்றில் உதராக்கினியால் சூடுண்டு வருந்துகிறது. மூச்சாகிய சூறுவளியால் மோதுண்டு அலைகிறது. மல ஜலப்பைகள் அழுத்த நசுங்குகிறது. பத்து மாத முடிவில் குழந்தை வடிவாய்ப் பூமியில் பிறக்கிறது.

பட்டி மாட்டான நான் உனை விட்டிராமே உலோகித
பத்ம சிர்பாத நீ இனி வந்துதாராய்.

பின்னர், அவ்வுயிர் மழலையெனத் தவழ்ந்தும் அழகுபெற நடந்தும் இளையோனாய், அரு மழலையே மிகுந்து குதலை மொழியே புகன்று, அதிவிதமாய் வளர்ந்து பதினாறுய்த் தெரிவையர்களாசை மிஞ்சி வெகு கவலையாய்உழன்றும் சில நாள் திரிகிறது. வறுமை வாட்ட வாடுகிறது.

மூப்பு முடுகுதலும், தோல் திரைத்து மயிர் நரைத்து காது செவிடாகி, கண்கள் குருடாகி, இரு கால்கள் தடுமாறி, முனையழிந்து மேட்டி குலைந்து, வாய்ப்பல் உதிர்ந்திட, முதுகு வெஞ்சிலைகாட்டி வளைகிறது. இருமல் முதலிய நோய்கள் இடம் பெறுகின்றன.

இறுதி நாள் நெருங்குதலும், வாய் ஒரு பக்கம் வாங்கி வலிக்கக் காலன் வருகிறான். கைப்பாசம் வீசிக் கடிதில் உயிரைக் கவர்கின்றான். உயிர் நீங்கிய உடலைக் கண்டு தாய், தம்பி, தங்கை, தாரம், தனயர், உற்றார் அனைவரும் 'எடும் எடும் என ஓடி எடுத்து நன்காட்டில் இட்டு எரி யூட்டுகின்றனர். நீங்கிய உயிர், வேறோர் ஊரில் பிறிதோர் உடலில் போய் மற்றொரு தாய்க்கு மகவாகி, பின் னொரு தரம் பிறக்கிறது. இதுவே சிற்றுயிர் செய்யும் சிறு தொழிலாகும்.

எனவே, இதனால் கிடைக்கும் புகழும் 'சிறு புகழ்' என்பதிற் பிழையில்லை. தாய்க் கருவில் தோய்ந்து தோய்ந்து தோன்றும்.

சிறுபுகழைத்தான் பெரியோர் திருப்புகழ் என்றனர் கருப்புகழைக் கற்க, கருப்புகும் (பிறப்பில் தள்ளும்) பயனே சித்திக்கு மாகலானும், உயிரிர்கள் கருவில் தங்கும் பெருமையைக் கூறுவதனாலும், இரண்டிற்கும் பொருந்த இதனைக் 'கருப்புகழ்' என்னல் சிறப்பேயாகும். அற்றேல் திருப்புகழ்தான் யாது?

திருப்புகழ் :—

ரசிய முரைத்தநுபூதி
ரதநிலைதனைத் தருவாயே,

உலகம் அறிவற்றது. உயிர் சிற்றறிவுடையது. அவ்விரண்டினையும் போலாது முற்றறிவான பேரறிவுடையவன் இறைவன். உலகம் போலவும், உயிர்களின் வாழ்வு போலவும் இறைவனுக்குத் தோற்றமும் கேடும் இல்லை. அவனது தொழில் தன் பெருமைக்கேற்ற பெருந்தொழில். அவனது புகழும், அறிவும் தொழிலும்போல பெரும் புகழாகும். அவன் அழியாதவனாதற்போலவே அவனது புகழும் அழிவற்றது.

இறைவன் எவ்வுயிர்களிலும் யாங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கிறான். பாலில் படுநெய்போல் மறைந்தும் விறகில் தீயெனப் பரந்தும், எள்ளில் எண்ணெயென நிறைந்தும் நிற்பன். 'அங்கிங் கென்ப தறுந்தேவாய் எங்குந்துன்றி நிறைந்தோன்' அவன். "ஈசானஸ் ஸர்வ பூதானாம்" என்பதும் நோக்குக.

அவனது முற்றறிவுடைமையை "ஈசானஸ் ஸர்வ வித்யானாம்" என்ற வாக்கால் அறிக. அவன் எல்லாஞ் செய்யவல்லான். (He is omnipotent). ஆதலின் அவன் அண்டமுதலணுக்கடையாக் கண்ட சராசரங்களை யெல்லாம் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடுவான். இச்செயல், அழிவு என்ப தறியாதது. குறையொன்றும் இல்லாதது. இச்செயலைப்போலவே இருக்கும் குறை வற்ற, நிறைவுற்ற அழிவற்ற பெரும்புகழைத் 'தெய்வப் புகழ்' என்று செப்புவதற்கு ஐயமுண்டோ?

இப்புகழைக் கற்பார் கரையேறுவார்; ஏத்துவார் ஈடேறுவார். இம்மை மறுமை நலஞான சகல செல்வமும் பெறுவாராதலின் — திருவெலாம் புணர்த்தும் புகழைத் திருப்புகழ் என்றுதானே சொல்லவேண்டும்.

'திரு' என்பது வெறும் பொருட் செல்வத்தை மட்டும் குறிக்காது. 'திரு' என்பது திருமகளையும் குறிக்கும்.

வனச மென வண்டு தனதனன வென்று
மருவு சரணங்கள் அருளாயோ.

எனவே புன்னெறியதனிற் செலுத்தும் பொருட்டுசெல்வ வெள்ளத்தில் புகுந்து பூரியராகாமல், மேலாம் செந்நெறியாகும் சிவநெறிக்கட் செலுத்த (ஞானத்) திரு (ஞான லக்குமி யருளை)க் கூட்டுவிக்கும் புகழும் ஆம் என்க.

'திரு என்பது முத்திச் செல்வம் என்ற பொருளில் தான் தேவார ஆசிரியர்கள் வழங்கியுள்ளனர்.

'சென்றடையாத திருவுடையானை' (ஆளுடைய பிள்ளை
'திருவே என் செல்வமே' (ஆளுடைய பிள்ளை)
பொன்னும் மெய்ப் பொருளும் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானை
திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்" (ஆளுடைய நம்பி)

இம் முத்திச் செல்வத்தைக் கூட்டுவிப்பதால்தான் தமிழ் மறைகள் திருமுறைகள் என்று வழங்கப்படும். ஆதலின், காமுகர் கண்களில் காம நூல் போலக் காட்சியளிக்கும் இத்தெய்விக நூல் முத்தி நலமுதவும் பேரின்பக்கருவூலமாம் என்று காட்டவே திருப்புகழ் எனும்பேர் சிறக்க அணிந்ததுபோலும்.

இறைவன் புகழைக் கூறுவதெல்லாம் திருப்புகழே. ஆயினும் 'பால்' என்றளவில் பசும் பாலும், 'பழம்' என்றதும் வாழைப்பழமும், திருவாசகம் என்றதும் மணிவாசகமும் நம் உணர்ச்சிக்குப் புலனாவது போலத் திருப்புகழ் புகழையே என்பது காரண இடுகுறியாக (சிறப்பிற் சிறப்பாக) ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த முருகபிரானது புகழாகிய திருப்புகழையே உணர்த்துவதாகும்.

இவர் காலத்துக்குப்பின் வந்தோர் சிலரும் 'திருப்புகழ்' எனச் சில பாடினாருளர். எனின், அவையனைத்தும் தமது சரக்கையும் விற்க எண்ணும் வியாபாரிகள், முன்னரே பெருவிலைக்கு விற்று பலர் மதிப்பைப் பெற்றுவரும் சரக்கின் பெயரையே தஞ்சரக்கிற்கும் இட்டு விலைப்படுத்துவது போலாகும்.

என் தாதை சதாசிவ கோத்திரன் அருள்பாலா
பார்வதி பங்கர் போற்றிய பத்மத்தாள் தொழ அருள்வாயே

அருணகிரிநாதனும்—முன் நவின்ற பாவை
ஓதுவார் 'திருப்புகழ்' என்று உலகிலுள்ளோர்
அதற்கு நிகருண்டோ? மற்றைச்
சாதலார் விண்ணவர்கள் தம்புகழைத்
திருப்புகழாச் சாற்றிடாரே'

எனவே கருப்புகழும் திருப்புகழும் இவை என ஒருவாறு அறிந்தோம்.

இவற்றில் எவற்றை இறைவன் கேட்பான்? நாம் எவற்றைக்கேட்க வேண்டும்?

"கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ்செவி"

ஆதலின் நாமும் கருப்புகழ் கேட்டலாகாது. திருப்புகழையே கேட்கவேண்டும். அதன் பயன் என்ன என்பதை

"விரித்து அருணகிரி நாதனுரைத்த புகழ் எனும் மாலை
மிகுத்த பலமுடனோதை—மகிழ்வோனே"
(அருணகிரியார்)

"கருப்புகழாம் பிறசமயக் கதை கேளாது எந்நாளும்
திருப்புகழைக் கற்பார்க்குச் சித்திஎட்டும் எளிதாமோ
(கந்தப்பதேசிகர்)

"ஞானம் பெறலாம் நலம் பெறலாம்; எந்நாளும்
வானம் அரசாள் வரம் பெறலாம்—மோனவீடு
ஏறலாம் யானைக்கு இளையான் திருப்புகழைக்
கூறினர்க் காமேயிக் கூறு"

"திருப்புகழைக்கற்க; திருப்புகழைக் கேட்க
திருப்புகழை நித்தஞ் செபிக்க—திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளிதாகுமே கூற்றைவென்று
கர்ச்சிக்கலாமே கெட" (அபியுக்தர்)

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்
சேர் புகழ் புரிந்தார் மாட்டு" (திருக்குறள்)

முதலிய வாக்குகளால் அறியலாம்.

V. S. வேங்கடராமன்.

அனந்தநாமனுக்கு ஏகாந்த நாமகரணம்.

ஆயிரம், ஆயிரம், திருநாமமுடையானுக்கு எப்படிப் பெயர் வைப்பது, நாமோ யதுவம்சத்தின் குலகுருவாகி விட்டோம். வசுதேவரது ஆக்ஞை பரமபாகவதாக்ஞை யாச்சே. நாம் பகிரங்கமாக மேளதாளத்தோடு நந்த கோபர் தம் மக்களுக்கு நாமகல்லுரை சொல்லி விழாக் கொண்டாடவைத்தால், ஒரு வேளை கம்ஸன் அறிந்து தகாதது செய்துவிட்டால் அது அநியாயமாகிவிடுமே என்றெல்லாம் மனத்தில் நினைத்தவாறே ஹோரா சாஸ்திர பாரங்கதரான கர்க்கமுனிவர் நந்தகோபரிடம் வந்து நடக்க வேண்டியதைத் தெரிவித்தார்.

மந்திரப் பெயர் மறைமொழி யன்றோ.

பெயரிடப் பெற்றுப் பிள்ளை பெருவாழ்வு வாழப் பெற்றோர்கள் எதற்குப் பக்கத்தில் வரவேண்டும். நானும் என்னைச் சேர்ந்தவர்களும்கூட அறியாமல் பரம ரகசிய மாக சுவஸ்திவாசனத்துடன்நாமகரண ஸம்ஸ்காரத்தைக் குழந்தைகட்கு நடத்தியருளும் என்று நந்தகோபர் பணி வுடன் வேண்டிக்கொண்டார். கர்க்கரும், தாம் விரும் பியபடியே ரகசியத்தில் அங் நந்தகோகுலத்தில் அந்த நந்தர் குழந்தைகட்கு மங்களகரமாகப் பெயர்களிட் டழைத்தார்.

குழந்தைகளின் பெயர்களது குணங்களைச் சொல்லுதல்.

இந்த ரோகிணி மகன், நண்பரை மகிழ்விப்பான். ஆதலால், இராமன் என உலகம் அழைக்கும். இவனுக்கே பலம் அதிகம் உண்டு. பலன் என்றும் வேறு பெயரா

லும் இவனை உலகம் அழைக்கும். யதுகுலத்தார்களை இவனே ஒற்றுமையுடன் வாழச் செய்யப்போகிறான். ஆதலால் சங்கருஷணன் என்றும் உலகம் அழைத்து மகிழும். நந்தகோபரே அறிந்தீரா? உமது மகன் இரண்டாமவன் நிறம் கறுப்பன். பெருங்கறுப்பன் ஆகட்டுமே. இவன் ஒரு சமயத்தில் வசுதேவருக்கு மகனாகப் பிறந்தான். ஆதலால் அறிஞர் இவனை வாசுதேவன் எனவும் அழைப்பர். உமது மகனுக்குக் குணங்கட்கொத்த பெயர்களும் செயல்கட்கொத்த பெயர்களும் பல்கோடி பல் கோடி உண்டு. அவற்றை நான் அறிவேன். உலகம் அறியாது. இந்தக் குழந்தைகளால் உங்களுடைய எல்லாத் துன்பங்களும் நீங்கப்போகின்றன. கறுப்பனைக் கிருஷ்ணன் என்றும் உலகம் அழைக்கும். கிருஷ் என்பதற்கு "சத்" என்பது அர்த்தம். ண என்பதற்கு "ஆநந்தம்" என்பது அர்த்தம். எப்போதும் சதானந்தம் தான் இக் குழந்தை. ஸ்ரீமந் நாராயணனுக்கு நிகர் இக்குழந்தை. நன்கு காப்பாற்றும் என்று சொல்லிவிட்டுக் கர்க்கர் சென்றார்.

தீராத விளையாட்டும் ஓயாத சிரிப்பும்

வெள்ளையனான பலராமனும், கரியவனான கண்ணனும் சேர்ந்தாற்போல் தவழ்ந்தனர். சேற்றிலெல்லாம் தவழ்வது, சலங்கைகளின் கல்கலென்ற ஒலியைக் கேட்பது. தண்டைகளின் கிண் கிண் என்ற நாதங் கேட்பது, இரு மூன்றடிகள் வைத்து நடக்க மேல் அறியாதவர் போல் நின்று விடுவது, பயந்தவர் போல் நடிப்பது, பால் குடிப்பது, முன்னிரண்டு பல் தெரியக் கன்னங் குழியச் சிரிப்பது, கன்றுகளின் வாலைப் பிடித்துத் தொங்குவது, மாடுகள் குழந்தைகளை முட்டிவிடப்போகிறதே, நெருப்பு குழந்தைகளைச் சுட்டுவிடப்போகிறதே, நாய் குழந்தைகளைக் கடித்துவிட்டால் என்ன செய்ய, குழந்தைகள் கத்தியால் விரல்களை வெட்டிக்கொள்ளுமே, சதாவும்

துய்யவரி வண்டு செய்யமது வுண்டு
துன்னிய கடம்பு தாவேனும்

குழந்தைகள் தண்ணீரிலே அலைகின்றனவே, குழந்தைகள் கிளிகளிடம் விரல்களைக் கொத்தக் கொடுத்துவிடுமே, குழந்தைகள் எங்காவது போய்க் காலில் முள்ளைத் தைத்துக்கொள்ளுமோ, இக்குழந்தைகளால் வீட்டுக் காரியங்களை பார்க்க முடிவதில்லையே, இவர்களை மேய்க்க நம்மால் ஆகவில்லையே என்றெல்லாம் யசோதை முதலானவர்கள் சொல்லிக்கொண்டே பரமானந்தம் அடைந்தார்கள்.

கோபிகைகள் முறையிடல்.

பகவானான பாலகிருஷ்ணனே பலராமனுடனும், மற்ற இடையச் சிறு பயல்களுடனும், அக்கோபஸ்திரீகளுக்குச் சந்தோஷமுண்டாக்கப் பல விளையாட்டுக்களை விளையாட அது பொறுக்காமல் அக்கோபிகைகள் யசோதையினிடம் கூட்டமாகக் கூடிப் பல குற்றங்களைச் சொல்லும் வழக்கமே பிரதிதினமும் கொண்டிருந்தனர்.

ஒருத்தி யசோதையிடம், பால் கறக்காதபோது எங்கள் வீட்டில் கண்ணன் வந்து கன்றுகளை அவிழ்த்துவிட்டான், என்றாள். திட்டினால் சிரிக்கிறான், சுவையாயுள்ள தயிரையும் பாலையும் குடிக்கிறான். குரங்குகட்குத் தயிரும் பாலும் தருகிறான். குரங்கு சாப்பிடாவிட்டால் தயிர்ப் பானையை உடைக்கவாவேண்டும். பால் பானையைக் கவிழ்க்கிறான். திருடும்போது தயிரோ பாலோ கிடைக்காவிட்டால் தொட்டிலில் தூங்கும் குழந்தைகளைக் கிள்ளிவிட்டு ஓடுகிறான். வீட்டு வேலைகளில் மும்முரமாயிருக்கும் போது உள்ளே நுழைகிறான். இருட்டிலுள்ள தயிர்ப் பானையும் எப்படித்தெரிகிறதோ. உறி எட்டாவிட்டால் முக்காலிமேல் உரலை வைத்து உரலில் ஒரு பையனை நிறுத்தி அவன் தோளில் காலை வைத்தேறிக் கொண்டு உறிச்சட்டியில் ஓட்டையிடுகிறான். உறிமணியின் நாக்கினைப் பிடித்து மணிச்சத்தமே கேட்காதபடி செய்கிறான். வெளியி

ஒளிதிக ழுருவுரு வேனு மறை யிறுதியில்
உள்ளத்தை நோக்க அருள்வாயே

னுள்ள கொப்பரைத் தண்ணீரை வீட்டினுள் கொட்டு கிறான். கோமயத்தை எடுத்துத் தரையெங்கும் விசிறி யெறிகிறான். இப்படியெல்லாம் செய்யக்கூடாத காரியங் களையெல்லாஞ் செய்துவிட்டு மிக நல்லவன்போல யசோதே! உன் பக்கத்தில் நிற்கிறான். உன்னைக்கண் டதும் எவ்வளவு பயம் பார் கண்ணனுக்கு, என்றெல்லாங் கோபிமார்கள் யசோதையிடம் முறையிட்டார்கள்.

அவ்வளவு வார்த்தைகளையும் பொறுமையுடன் யசோதை கேட்டுச் சிரித்துக் கொண்டே புத்திர வாற்சலி யத்தால் ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமையால் கண்ணனை வாயினல் அதட்டி மிரட்டிவைக்கக்கூட விரும்பவில்லை. காலைத் தொட்டு என்னிடம்தானே என் கால்களையே சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிறான். கண்ணன் உங்கள் வீடுகளுக் கெல்லாம் வரவாவது. குற்றஞ் செய்யவாவது. பைத்தி யக்காரிகளா! போங்கள் என்று கோபிமார்களை யசோதை மிரட்டி அனுப்பினள்.

அன்பு

அன்பு வேண்டும்

(புலவர் அரசு)

அன்பின் இலக்கணம் யாவரும் அறிந்த தொன்று. அன்பு பற்று. பற்றுடையோன் தொடர்புடையோன். அன்புடையோன் அகிலமுடையோன். தன்னைப்போற் பிறரை நினைப்போன். உலகம் போற்றும் உயர்நிலையுடை யோன். அன்பினல் ஆளலாம் உலகை! அன்பு ஒன்றே அனைத்துக்கும் ஆதாவு. 'என்பு இலாத புழுவை வெயில் காய்வதுபோல அன்பு இலாத எதனையும் அறம் காயும்.' அன்பு பண்பு; அறம் செய்கை. அன்பிலாத அறம் பயன்படாது. ஆகவே, யாவருக்கும் அன்பு வேண்டும்! அன்பு வேண்டும்!!

உள்ளப்பெருக நின்ற தொய்யபபடாமல் என்றும்
உள்ளத்தின் மாய்வ தொன்றை மொழியாயோ

பகைவரிடமும் அன்பு காட்டுக!

தன்னைச் சார்ந்தோரிடம் மட்டும் அன்பு வேண்டுமென்றுரைப்பது தவறு! தன் பகைவரிடமும் அன்பு காட்டுதல் வேண்டும் 'அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்! மறத்திற்கும் அஃதே துணை' என்றனர் இறைமைப்புலவர் வள்ளுவர். உயிர் தூயது! இறைவனுக்கு உடலாக உள்ளவை எல்லா உயிர்களும்! அவ்வுயிர்களிலே நமக்குப் பகை உயிரென்பதுண்டோ? யாரை நாம் பகைவராகப் பார்க்கிறோமோ, அவருடைய பண்பே நமக்குப் பகை! அப்பண்பையே நாம் வெறுக்கின்றோம்; அப் பண்பை அவர் விட்டால் அவர் நம் நண்பரே யாவர். ஆகையால், நம் பகைவரிடமும் அன்பு பாராட்டல் வேண்டும். பகைவரை வெல்ல அன்பே கருவி! நம் அன்புடைமை கண்ட பகைவன் நம் உண்மையன்புக்கு வசப்படுவான். பகைவனை எங்ஙனமாவது பாழ்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் மக்கட் பணியன்று! வாலியை மறைந்து கொன்ற இராமனும், தன் மனைவியைக் கவர்ந்து சென்ற இராவணன் முதல் நாட் போரில் வெறுங்கையனாக நின்றபோது — எளிதிலே கொல்லும் வாய்ப்புக் கிடைத்தபோது — 'இன்று போய் நாளைக்குப் படையுடன் வருக' எனப்போக்கினன்! எப்போதும் அன்புப் படை நம் கையில் இருத்தல் வேண்டும். தற்காப்புப் படை அன்பு ஒன்றே.

இறை வழிபாடு அன்பே.

அன்பே சிவம்! என்கிறோம். சிவமெனுஞ் செம்பொருளின் உருவம் அன்பே. அறிவின் உருவாகிய இறைவர் அன்பின் உருவாகவும் இருக்கின்றனர். தாயுமான தண்ணளியார் இறைவரே யாமெனத் தக்கவாறு அறிவோம். அத்தகைய ஆண்டவருக்கு விருப்பமானது அன்பே! அவரை வழிபட இடும் மலர் அன்பு மலரே!

என்னியென தாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீ பொற் கழல் தாராய்

அன்பு வலையிலே ஆர்த்திடலொவ்வும் அவரை! அன்பன்றி வேறேதும் இறைவர் ஏலார்.

எனின், 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக்' 'கரைந்து கரைந்து' 'நாத் தழும்புற' இறைவர் திருப் பெயரை நவின்று நிற்பது மட்டும் அன்பா? காலை மாலை தவறுமற் கடவுளின் திருக்கோயிலை வலம் வந்து கைகுவித் துக் கண் மூடிப் போற்றுவது மட்டும் அன்பா? அன்று! 'பிறவிப் பெருங்கடல்' நீந்தவேண்டி, 'வேண்டுதல் வேண்டாமை யிலான் அடிசேர' வேண்டுவது மட்டும் அன்பன்று! 'வாழ் நாளும் வளமிகு நிதியமும் பெருக வரந்தரல் வேண்டும்' என வாடாத பேரொளியை வேண்டுவது மட்டும் அன்பன்று! எங்கும் நிறை இறை வர் திருக்கோயில்களான எண்ணற்ற உயிர்களிடமும் இரங்கி அன்பு காட்டுவது — அவ்வுயிர்களின் இடையூற் றைக் கண்டு 'எரியின் இழுதாகி' விரைந்து நீக்குவதும் வேண்டும். 'நடமாடுங் கோயில்கள்' இருண்டு கிடக் கையிற், 'படமாடுங் கோயிற் பரமர்க்கு'த் திருவிளக் கிட்டுச் சேவிப்பது அன்பாகுமா? கோடிக் கணக்கான மக்கள் கஞ்சிக்கு வாடும்போது, அம் மக்களின் அம் மையும் அப்பனும் ஆன ஆண்டவனுக்குப் பாலுந் தயி ருந் தேனுமாகத் திக்கு முக்காட முழுக்காட்டித் தேங் காயும் முக்கனியும் வெண்பொங்கலுஞ் சருக்கரைப் பொங்கலும் வடையும் பிறவுமாகப் படைத்துத் தங்கள் நாவினையும் வயிற்றினையும் வழிபடுவது மட்டும் அன் பாகுமா? இறைவர் பாலுண்டாம் அன்புப் பெருக் கினால் நம் உடல் பொருள் ஆவியெலாம் அவருக்கே ஆக்கிவிடுவது சிறந்த பண்புதான்! நல்ல அபிடேகமும் சிறந்த திருவிழாவுமாக நம் பொருளைக் காணிக்கைப் படுத்துதல் நம் கடமைதான்! எனினும், வீட்டு வாயி லுக்கு வரும் இரவலரை இகழ்ந்துரைத்துவிட்டு, உண வளிக்காமல் ஓட்டிவிட்டு, இறைவர் திருமுன் நிற்கும்

உணக்கையிடு படுபாவி எனக்குனது கழல் பாட
உயர்ச்சிபெறு குணசீலம்—அருள்வாயே

போது என்ன எண்ணுவாய்! எங்கும் நிறை பரம் பொருளை இகழ்வதையன்றி நீ கண்டதென்ன? நீ உன் வீட்டிலே இரவலரை யிகழ்ந்து ஒட்டியதை இறைவர் அறியமாட்டாரா? அறிவின் வடிவான — ஒளியின் வடிவான — அவருக்கு அது நன்றாகத் தெரியும்! அவர் குருடரல்லர்! மேலும், அவர் உன் முகமனுக்கும் போற்றுதலுக்கும் ஏமாந்து வசப்படமாட்டார். அன்பு வலை யொன்றே அவரை வசப்படுத்தும்! அந்த அன்பும் பிற உயிர்களிடங்காட்டும் அன்பே! உன் நலத்துக்காகக் கொடுக்கும் காணிக்கையான அன்பை அவர் விரும்பார்!

இறைவர் நம்மைப் போன்றவரென எண்ணுவது தகாது. எல்லாம் வல்ல இறைவர் திருவருளை முன்னிட்டு நீ செய்யும் எத் தொழிலும் நலமுற வேண்டுமானால், உன் கூழைக்கும்பிடாலே கடவுளை வசப் படுத்த நினையாதே! எல்லா வுயிர்க்கும் இனிமை செய்தாலன்றி இறைவர் வசப்படார். அது ஒன்றே இறை வழிபாட்டிலே முதன்மையானது.

பெரிய விருந்துகள் வைக்கிறாய். அவ்விருந்தின் நோக்கம் நீ உயர்வடைவதுவே. நீ அளிக்கும் அறுசுவை யுண்டியை ஆர அமர உண்டு வெளிவந்தவுடன் உன் நண்பர்களும் உன் மேலாளரும், 'விருந்து நன்று!' என விளம்பும் நன்மதிப்புக்கு ஏங்கி நிற்கிறாய். ஆனால், அவர்கள் கூறுவதைக் கேட்டவுடன் உன் முகம் வாடி விடுகிறது. அதே சமயத்திலே உன் வீட்டு வாயிலில் ஒரு கவள உணவுக்காகக் கையேந்தி நிற்கும் எளியவரின் நிலை உன் உள்ளத்திலே இரக்கத்தை உண்டாக்கவில்லை. இச்செயல் அன்பாகுமா? இறை வழிபாடுதான் ஆகுமா? இம்மை மறுமைப் பயனை இத்தகைய மண் குதிரையை யூர்ந்து சென்று அடைய முடியும்! 'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து, அவர் திருந்து முகம்' நோக்காமல், விருந்தினரின் முகத்தை நோக்கினால் விளையுமோ அன்பு?

பருத்தமயில் மிசை நினைத்த பொழுதுன
பதத்து மலரிணை அருள்வாயே

ஏழை பங்காளரான இறை வழிபாடு 'எவ்வுயிருந் தன்னுயிர்போல்' என்னும் அன்பு நிலை ஒன்றேயாம்!

அன்பை அன்பால் வழிபடு! நீ இறைவர் அன்பை வேண்டினல் எவ்வுயிரும் இறைவர் கோயிலே என்பதை உணர்ந்து நட! பிறருக்குத் தீமை செய்துவிட்டு உனக்கு மட்டும் நன்மையை நல்கும்படி இறைவனை வேண்டாதே.'

அன்பே சிவம்.

மார்கழி மாதம்

(ஸ்ரீ வத்ஸன்)

திருத்தலங்களும், திருக்கோயில்களும் நிரம்பப்பெற்ற இத் தெய்வீகத் தமிழ் நாட்டில் மார்கழி மாதத்தில் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் ஆண்டவன் தியானத்தில் ஆழ்ந்த ஏராளமான பஜனைக் கோஷ்டிகள் தத்தம் வீடுகளினும், வீதிகளிலும் தக்க பக்க வாத்தியங்களுடன் புறப்பட்டுக் கோயில்களை வலம் வரும் காக்ஷியை இன்றும் காணலாம். மேலும் ஒவ்வொரு வீட்டிலும் சிறந்த தெய்வ ஆராதனைகளும் நடைபெறுகின்றன. இவை பாமரனுக்கும் ஓர் தெய்வீக உணர்ச்சியை ஊட்டும்.

தமிழ்ர்கள் யாவரும் முக்கியமாய் கிராமங்களிலுள்ளவர்கள் அவரவர்கள் இல்லங்களை பசுஞ்சாணம் கொண்டு மெழுகி சுத்தம் செய்து, ஆங்காங்கு திருக்கோலங்களிட்டு தெருவில் அக்கோலங்களின் கோணத்தலங்களில் (angles) கிண்ணங்கள் போன்று எலுமிச்சை பழத்தினளவு சாணம் வைத்து அதின்மேல் பரங்கிப் பூவை வைத்து அலங்கரிப்பது ரொம்பவும் வசீகரமான தோற்றத்தை யளித்து வரவேற்பது போலிருக்கும்

இத்தனை வைபவங்களும் முக்கியமாக இம்மாதத்தில் நடைபெறுவது யாதுகாரணம்பற்றி என்பதைச் சற்று கவனிப்போம்.

கயவனை வெற்றிப் புகழ் திகழ் பத்மக்
கழல்கள் துதிக்கக் கருதாதோ

புராண வரலாறு

தேவர்கட்கு ஒளிமிகு காலம் உத்தராயணம் என்றும் ஒளிக்குறைவு காலம் தக்ஷிணாயணம் என்றும், அத்தகைய ஒளிமிகு காலம் வருவதை எதிர்பார்த்து வரவேற்பது போல முன்கூட்டியே இம்மாதத்தில் ஈசனை வழிபடல் அவசியம் என்றும் அத்தகைய வழிபாடுகள் இக பர சுகங்களையும் மானிடர்க்கு அளிக்கும் என்றும் ஒரு சாஸ்திரம் கூறுகிறது.

மற்றும் ஸ்காந்த புராணத்தில் ஸ்ரீ வைஷ்ணவ காண்டத்தில் 17 அத்தியாயங்களில் விபரித்திருப்பதாவது:— மார்கழி மாதம் தேவர்கட்கு உஷட்காலம். ஆகவே அவர்களைப் பிரீதி செய்யும் நிமித்தம் ஜனங்கள் யாவரும் அதே உஷட் காலத்தில் (வைகரையில்) துயில் விட்டெழுந்து நீராடி, முறைப்படித் திலகமணிந்து, அங்கநியாச கரநியாசங்களுடன் ஆதிநாயகனைத் தொழுவதுடன், சிருட்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும் முத்தொழிலில் ஷதிதித் தொழிலுக் கிறைவனை ஸ்ரீமந் நாராயணனை பஜித்தும், துளசியை முதலாகக்கொண்ட புஷ்பங்களால் அர்ச்சித்தும் அரிசி, பருப்பு, நெய் இவற்றுலாகிய அன்னத்தை அளித்தும் வழிபட்டு நாமசங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மற்றும் துவாரகை நாதனிடம் மையல் கொண்ட கோபியர்கள் தத்தம் இல்லங்களை பசுஞ்சாணத்தால் சுத்தம் செய்து திருக்கோலமிட்டு அவற்றினிடையே படர் கொடிப் பூ மஞ்சள்நிற புஷ்பம், பரங்கிப் பூவை வைத்து அலங்கரித்து துவாரகை நாதனை மேலே கண்டுள்ளவாறு பஜித்தார்கள் என்றும் அவ்வாறே கலியுகத்தில் செய்பவர்கள் இம்மையில் சுசத்தையும் மறுமையில் ஸ்ரீவைகுண்டத்தையும் அடைவார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மற்றும் தமிழ் நூல்கள் கூறுவதாவன :— மார்கழி மாதம் மாபாரதப்போர் நடைபெற்றது. புராணங்களில்

அசடர் மூகரென்று அவலமே மொழிந்து
அறிவிலேன் அழிந்திடலாமோ

கண்டுள்ள மற்ற எல்லாப் போரைக் காட்டிலும் பாரதப் போர் ரொம்பவும் பெரிது. அதில் மடிந்த மன்னர்கட்கும் சனங்கட்கும் கணக்கேயில்லை. போரில் உபயோகப் படுத்தப்படாத அத்திர சத்திரங்களும் இல்லை. போரின் காரணமாக கொடுநோய்கள் ஏற்பட்டன. அநேக தேசங்களில் சனங்களே இல்லையாம். இப்படியாகப் பாரதப் போரின் நிமித்தம் பல காரணங்களைக் கொண்டு ஜனச் சூன்யமும், ஜனங்கட்குப் பீடையும் ஏற்பட்டது பற்றியே இம்மாதம் பொதுவாகப் பீடை மாதம் அல்லது சூனிய மாதம் என்னலாம் என்றும் ஆகவே இம்மாதத்தில் இனியும் அவ்வாறு ஜனச்சூனியமும் ஜனப்பீடையும் ஏற்படாதவாறு அவரவர்கள் உதயத்தில் எழுந்ததும் முதல் தொழிலாக இறைவனை வழிப்பட்டுவிட்டுப் பிறகு மற்றைய அலுவல்களைக் கவனித்தல் முறை என்றதாகக் கூறப்பட்டுள்ளது.

புராணங்கள் ஒருவாறு மார்கழி மாதம் சூனிய மாதம் என்று கூறின. அது எவ்வளவிற் பொருந்தும் என்று கவனிப்போம்.

ஆகாயத்தில் ஓர் குறிப்பிட்ட காலத்தில் பூமிக்கு மேலும் கீழும் உள்ள கிரகங்களினால் அந்த பூமிக்கு நன்மையும் தீமையும் ஏற்படும். உதாரணமாக நெருப்பிற் கருகிலுள்ள பதார்த்தம் சூட்டையடையும், தண்ணீருக்கு அருகிலுள்ளது குளிர்ச்சியை யடையும். அவ்வாறே கிருகங்களின் உஷ்ண, சமநிலை, சீதள நிலைக்குத் தக்கவாறு பூமியும் அதிலுள்ளவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். இவற்றினை அதாவது இத்தகைய கிரகநிலையை அறிவிப்பது வான சாஸ்திரம். அத்தகைய நிலையில் ஏற்படும் பலாபலன்களைக் கூறுவது சோதிடம்.

கிரியும் மருள் விட்டனது குவளைச்
சிகரி பகரப் பெறுவேனே

அந்த முறையில் ராசி மண்டலத்தில் 240 முதல் 270 பாக வரையிலுள்ள பிரதேசத்தில் பூமி வரும் காலம் மார்கழி மாதம், தனுர் ராசி என்கிறோம். இந்த தனுர் ராசிக்கு அதிபதி குரு. கிரகங்களுக்கெல்லாம் பெரியது குரு. முழுச்சுக கிரகம். தானியக்களஞ்சியத்துக்கதிபதி; மனதிற்கு அதிபதி; எக்காலத்தும் கெடுதலை அளிக்காதது, தெய்வீகத்தை வளர்க்கக்கூடியது. இராசிக்கு நிறம் பொன் வர்ணம் ஆதலால் குருவிற்கு பொன்னவன் என்றும் பெயர். பஞ்ச பூதங்களில் தேயுவின் (அல்லது ஒளியின்) அம்சம் பெற்றது. மற்றும் எல்லாவித சுப காரியங்கட்கும் பொருத்தமான லக்கினம் தனுசு. முக்கியமாக வேளாண்மைக்காரர்களுக்கு ஏர் உழ, களஞ்சியம் வைக்க, புதுக்குடிப்போக, விவாக, முதலியன செய்ய பொருத்தமுள்ள லக்கினம். இப்படிப்பட்ட ஓர் மாதத்தை வானசாஸ்திரக்காரரும் சோதிடரும் கூட சூனிய மாதம் என்றே, சுபகாரியங்கட்கு விலக்கான மாதம் என்றே சம்பிரதாயத்தை, வழக்கத்தைக் கூற வந்ததுதான் யாது காரணம் பற்றியோ?

இயற்கை நிலை :— பயிர்கள்.

இனி இயற்கை நிலையைக் கவனிப்போம். பாரத தேசத்தில் மக்கள் மதத்தின்பேரில், சாத்திரம், சம்பிரதாயம் அல்லது வழக்கத்தின்பேரில், பற்பல திருவிழாக்கள், திருநாட்கள், நோன்புகள் கொண்டாடியபோதிலும் அவை யாவும் இயற்கையை அனுசரித்ததேயாகும். விஞ்ஞான சாத்திரம், வான சாத்திரம், முதலியவற்றின் கருத்துகட்கு மாறுபட்டதாக இராது. இந்த உண்மையை யாவரும் மனத்திலிருத்தல் அவசியம்.

இத்தகைய உண்மையையே புராணங்கள் முதலிய கதைகள் வாயிலாக இவற்றினைச் செய்தல் நலம் தரும், இவை தீமை தரும், இது புண்ணியம் இது பாவம், இது நரகத்தில் சேர்க்கும், இது சொர்க்கத்தை

கிண் கிணீமுக வித பதயுகமலர்
தந்த பேரருள் கனவிலு நனவிலு மறவேனே

அளிக்கும், இது பிறவியைக் கடத்தும் என்றவாறு மனிதவர்க்கம் எப்படியாவது நன்மை அடைந்து சுகமாக வாழவேண்டுமென்ற கருத்தினையே மனதில் கொண்டு கூறியுள்ளன என்றுணரல் அவசியம் என்கிறார் பிரிஜேந்திர நாத் ஸீல் என்ற அறிஞர். (Sir Brajendranath Seal M. A. Ph. D. Professor of Philosophy.)

அம்முறையில் சித்திரை வைகாசி மாதங்கள் தொட்டு தென்மேற்கு பருவக்கால மழைக் காரணமாக, ஆறுகளில் வெள்ளம் வந்ததும் நம் நாட்டில் வேளாண்மைக்காரர்கள் சீவனத்துக்காக முக்கிய உணவுப் பொருள்களைப் பயிரிடத் துவக்குகிறார்கள். இத்தகைய பயிர்களில் சில மூன்று மாதங்களிலும், சில ஆறு மாதங்களிலும் பலனளிக்கத்துவங்குகின்றன. முதல் பலன் ஐப்பசி மாதம் முதலும், இரண்டாவது பலன் தை மாதம் முதலும் அடையப் பெறுகிறார்கள்.

பொதுவாக ஏதாமொருநன்மை, நல்லோர் சங்கமம், நல்ல வருவாய்கள் முதலியன ஏற்படில் அதை மனித வர்க்கத்தினர் பாராட்டுதல் இயற்கையும் நியமனமுமாகும். உதாரணமாக ,அயல் தேயம் சென்ற ஒருவர், திரும்ப வீடு வந்து சேரும் நன்னாளை எதிர்பார்த்து, அதனைச் சார்ந்தவர்கள் அவனது வரவை வேண்டி நிற்பது இயற்கையே. அவ்வாறே, தாங்கள் பிரயாசைப் பட்டுப் பயிர்செய்வித்ததும்: மக்கட்கு மூலாதாரமாயும் சீவியத்துக்கே அவசியமானதுமான அந்த உணவுப் பொருள்கள் யாதொரு குறைவின்றி, நல்ல முறையில் கிடைக்கப்பெற அத்தகையோர்கள் வேண்டுதல் முறையே யன்றோ? அதற்காகவே முன்கூட்டி அதாவது ஐப்பசி தை மாதங்களில் கிடைக்கப்போகும் தானிய வகைகள் பரிபூரணமாக இருக்கும்படி புரட்டாசி மாதத்தில் முதன்முதலாக கணபதியையும், பிறகு நவராத்திரி என்னும் ஒன்பது நாட்களில் எல்லாம் வல்ல தாயையும் வேண்டி, பிறகு

ஐப்பசி மாதத்தில் தீப ஒளி என்னும் விழாவையும் கொண்டாடலாயிற்று.

அவ்வாறே தை மாதத்தில் வரப்போகும் பலன்களை உத்தேசித்து, இந்த பலன் அதிமுக்கியம் வாய்ந்ததினாலும், முன் மாதம் பூராவும் (மார்கழி பூராவும் தினப்போது குறைத்தலானதினால்) சோம்பலின்றி, அதிகாலையில் எழுந்து, நித்திய கடன்களை முடித்து, பரமனை வழிபட்டுவிட்டு வயல்களில் உள்ள பயிர்கள் அழியாமலும், சேதம் நேராமலும் பாதுகாத்தல் அவசியம்.

மேலும், ஐப்பசி முதல் மார்கழி முடிய "பூ கர்ப்ப நாள்" என்றும், அக்காலத்தில் உலகத்தில் எந்த பாகமும் பயிர்பச்சைகள் காணப்படுமேயன்றி, வறண்டதாக யிரா. எங்கும் ஒரே பசுமை, மனதுக்கு இனிப்பைத் தரும் காக்ஷி. கர்ப்பச்சேதம் வராமல் கர்ப்பிணியைப் பாதுகாத்தலை ஒக்கும் நாம் பயிர்களைப் பாதுகாத்தல். தவிரவும், அறுவடையப்படும் பயிர்கள் 30 முதல் 45 தினங்கள் முன்னதாகத்தான் சாரத்தையடைகின்றன. (Life Principle) அப்படிச் சாரம் பெறாத பயிர்களைப் பதறு அல்லது உமி என்கிறோம். இதைக் கர்ப்பச் சிதைவுக்கு ஒப்பிட்டு, அஃது பயிர்கட்கு வாராமல் முன்னதாகக் காப்பாற்றல் முறை. அதற்காகப் பரமனையும் வழிபடுகிறோம் என்கிறார்.

மகரிஷிகள் ப்ரசஸ்தபாதர், சரகர், சுச்ருதர், பதஞ்சலி இவர்கள் கூறுவதாவது:— இந்தப் பருவத்தில் (ஐப்பசி முதல் மார்கழி முடிய) ஸ்வேதஜங்கள் born of moisture and heat) விஷப் பூச்சிகள், கொசுக்கள், ஒரு வகை விஷப் பாம்புகள் ஜனிக்கும். குளிர், பனி காரணமாக ஜனங்கள் ஆரோக்கிய முறையை யனுசரிக்கத் தவக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக, நோய்கள் பரவி, ஜனங்களைப் பாதிக்கும். ஆகவே, அவற்றைத் தடுத்து நல்ல ஆரோக்கிய சரீரத்துடன் இருக்கவேண்டியே, மார்

நித்தமின தாளில் வைத்தனொரு காதல்
நிற்கும் வகை யோத நினைவாயே

கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்திருந்து நீராடல் முதலி யன நியமிக்கப்பட்டது என்றும் கூறுகிறார்.

மேலும் இக்காலங்களில், ஜனங்கட்கு கபம், சுரம், அரோசகம் இவைகள் ஏற்படும். அதைத் தவிற்கவே அவுஷதமாகிய துளசியையும் வீரிய விருத்தியையும் புஷ்டியையும் அளிக்கக் கூடிய பொங்கல் அன்னத்தையும் புசிக்கும்படியாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலே கூறியுள்ளதிலிருந்து இம்மார்கழி மாதத்தின் முக்கியத்தை யாவரும் உணர்ந்து அதிகாலையில் எழுந்து நித்திய முறைகளைச் செய்து பரமனை வழிபட்டு, சீரிய ஆகாரத்தை உட்கொண்டு தை மாதம் நல்ல பலனை எதிர்பார்த்து பிறகு அம்மாதத்தில் மநுதீபவெளியாகியப் பொங்கல் என்னும் தானிய வெற்றியைக் கொண்டாடுவார்களாக.

வாழ்க வையகம்! வாழ்க, வாழ்கவே!!

★

வரப் பெற்றோம்

திருச்செந்தில் 'இலைவிபூதி மகிமை' என்ற சிறிய புத்தகம். சகல வேதங்களும் பன்னீர் மரங்களாக இத்தலத்தில் தோன்றின மகிமையை விளக்க, இன்றும் பன்னீர் இலையில் விபூதியைக் கொடுத்து வருகிறார்கள். விபூதியும் வேத மந்திரசக்தியைப் பெற்ற தாயிருக்கிற மகிமையை விளக்குகிறது, விலை அணா 1.
கிடைக்குமிடம்: ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் ஆபீஸ்,
திருச்செந்தூர்.

தொலைவிலாத பேராசை துரிசறாத வோர் பேதை
தொழுமு பாய மேதோசொ லருள் வாயே

3 2

தனை மறந்து நின்ற ஞானம்
தனை நினைந் தழிந்தது
உனைமறந்துற்ற அல்லல்
உனை நினைந் தொழிந்தது.

ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

யாவருக்கும்
I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

மாதர்களுக்கு
I.D.L.71 ப்ரிமெலெக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

குழந்தைகளுக்கு
I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின் தேவைகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.6 (ரெஜிஸ்டர்ட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

யுனைடெட் கன்ஸர்ன்
54. பந்தர் தெரு :: மதராஸ். 1

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Reg. No. M. 5390

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்,

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.
TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்
53, கிடங்கு தெரு, மதராஸ் - 1.

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badriau St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Mad